செய்தி வெளியீடு எண்:236 நாள்:28.04.2021

# செய்தி வெளியீடு

**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள தனியார் வேளாண்மை கல்லூரிகளுக்கான மாணவர் சேர்க்கை குறித்த குழுவின் அறிக்கையை மாண்புமிகு நீதியரசர் (திருமதி) நீதிபதி பிரபா ஸ்ரீதேவன், ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களிடம் அளித்தார்கள்.**

------

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள தனியார் வேளாண்மைக் கல்லூரிகளில் சிறுபான்மை மற்றும் சிறுபான்மையினர் அல்லாத மாணவர் சேர்க்கைகளை கண்காணிக்க மாண்புமிகு நீதியரசர் (திருமதி) நீதிபதி பிரபா ஸ்ரீதேவன், ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அவர்களின் தலைமையில் மாணவர் சேர்க்கைக் குழுவை அரசு நியமித்தது.

இதனைத் தொடர்ந்து, இணைப்பு வேளாண்மைக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை தொடர்பாக பரிந்துரைகளை உள்ளடக்கி மாண்புமிகு நீதியரசர் (திருமதி) நீதிபதி பிரபா ஸ்ரீதேவன் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் தம்முடைய அறிக்கையை தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., அவர்களிடம் இன்று (28.04.2021) நேரில் அளித்தார்.

இந்நிகழ்வின்போது, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் திரு ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்களும் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**